دعوة



# பைபிளில் முஹம்மத் ﷺ

محمد صلى الله عليه وسلم

في الإنجيل

(تاميلي)

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

**IN THE NAME OF ALLAH**
**THE MERCIFUL THE COMPASSIONATE**

# محمد صلى الله عليه وسلم في الإنجيل

## باللغة التاميل

د. جمال بدوي

# பைபிளில் முஹம்மத் ﷺ

*ஆங்கிலத்தில்:*

கலாநிதி ஜமால் பதவி

*தமிழில்:*

எம்.வை.எம்.மீஆது

## பைபிளில் முஹம்மத்

"எவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய நம் தூதரைப் பின்பற்றுகிறார்களோ, அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராத்திலும் இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள்." (புனித குர்ஆன் 7:157)

## முஹம்மதின் வருகை பற்றிய பைபிளின் தீர்க்கதரிசனங்கள்

ஏகத்துவ வணக்கக் கொள்கையின் தலைவராகவும் யூதர்களினதும், கிறிஸ்தவர்களினதும், முஸ்லிம்களினதும் பிதாவாகவும் இப்றாஹிம் (அலை) பரந்த அளவில் மதிக்கப் படுகின்றார். யஃகூப், யுசுப், மூஸா,தாவூத், ஸுலைமான், ஈஸா போன்ற உயர் அந்தஸ்து பெற்றோர்களையும் உட்படுத்திய எல்லா இஸ்ரவேல் நபிமார்களும், அவரது புதல்வர் இஸ்ஹாக் மூலமாகவே தோன்றினர். அவர்கள் அனைவர்மீதும் சாந்தியும் ஆசிர்வாதங்களும் உண்டாகட்டும். இந்தப் பெரும் நபிமார்களின் வருகை இப்றாஹிமின் சந்ததியினர் ஊடாக உலக மக்களை ஆசிர்வதிக்க அல்லாஹ்வினால் செய்யப்பட்ட, வாக்குறுதிகளின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்தது. (பைபிளின் (விவிலிய நூலின்)

முதல் அதிகாரம்: 12:2-3) அவ்வாறாக பூர்த்தி செய்தல் முஸ்லிம்களால் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. முஸ்லிம்கள் அனைத்து நபிமார்களை விசுவாசித்தலையும் கண்ணியப் படுத்தலையும் ஈமானின் (நம்பிக்கை) ஓர் அம்சமாகக் கருதுகின்றனர்.

## இஸ்மாயிலினதும், இஸ்ஹாகினதும் ஆசிர்வாதங்கள்

இப்றாஹிமுக்குப் பிறந்த முதலாவது புதல்வரும் (இஸ்மாயீல்), அவரது சந்ததியினரும் இறைவனின் ஒப்பந்தத்திலும், வாக்குறுதியிலும் உட்படுத்தப்பட்டனரா? இந்த வினாவைத் தெளிவு படுத்த பைபிளிலிருந்து சில வசனங்கள் துணைபுரியலாம்:

(1) ஜெனிஸிஸ் 12:2-3ல் இறைவன் இப்றாஹிமுக்கும் அவரது சந்ததியினர்க்கும், அவருக்கு எந்தப் பிள்ளையும் பிறப்பதற்கு முன் இறைவனால் வழங்கப்பட்ட வாக்குறிதியைப் பற்றிப் பேசுகின்றது.

(2) ஜெனிஸிஸ் 17:4ல் இஸ்மாயிலின் பிறப்புக்குப் பின்னரும், இஸ்ஹாக் பிறப்பதற்கு முன்னரும் இறைவனது வாக்குறுதியை மீண்டும் கூறுகின்றது.

(3) ஜெனிஸிஸ் 21ம் அத்தியாயத்தில் இஸ்ஹாக் விஷேடமாக ஆசிர்வதிக்கப்படுகின்றார். ஆனால், இஸ்மாயிலும் குறிப்பாக ஆசிர்வதிக்கப்பட்டு, ஜெனிஸிஸ் 21:13,18 ம் வசனத்தில் கூறப்பட்டபடி ஒரு பெரும் தேசமக்களாக ஆகுவதற்கு இறைவனால் வாக்களிக்கப்படுகிறார்.

(4) டியூடெரொனொமி 21:15-17 இன் பிரகாரம், முதலாவது பிறந்த புதல்வரின் பாரம்பரிய உரிமைகளும் சலுகைகளும் அவரது தாயாரின் சமூக அந்தஸ்தினால் பாதிக்கப்படக் கூடியனவாக இல்லை. (இஸ்ஹாக்கின் தாயார், ஸாரா போன்ற ஒரு சுதந்திரப் பெண்மணியாக இருத்தல்) இது வெளிப்படுத்தப்பட்ட எல்லா சமயங்களினதும் ஒழுக்க மனிதாபிமான கொள்கைகளுக்கு ஏற்றதாக மாத்திரமே இருக்கின்றது.

(5)இப்றாஹிமின் மகனாகவும் 'விதை' யாகவும் இஸ்மாயிலின் பூரண, முறைப்படி பிறந்த தன்மையும் இப்றாஹிமின் மனைவி அவரது தாயார் ஹாஜராவின் முறைப்படி பிறந்த தன்மையும் தெளிவாக ஜெனிஸிஸ் 21:13 இலும் 16:3 இலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இஸ்ரவேலரின் கடைசித் தூதர் நபி ஈஸா (அலை) பின்னர், இஸ்மாயிலுக்கும் அவரது சந்ததியினருக்கும், தான் அளித்த வாக்கினை

நிறைவேற்றும் காலம் வந்து விட்டது போலும். ஈஸாவுக்கு 600 வருடங்கள் கழிந்ததன் பின் இஸ்மாயில் மூலம் இப்றாஹிமின் சந்ததியார்களிடமிருந்து இறை தூதர் முஹம்மத் (ﷺ) வருகை தந்தார். இப்றாஹிமின் குடும்ப மரத்தின் இரண்டு பிரதான கிளைகளுக்குறிய இறை ஆசிர்வாதம் இப்போது பூர்த்தி செய்யப்பட்டது. ஆனால், பைபிள் உண்மையிலே முஹம்மது நபியின் வருகையை முன்னறிவித்தது என்பதற்கு, உறுதிப்படுத்தும் மேலதிகமான ஆதாரங்கள் இருக்கின்றனவா?

## மூஸா போன்ற ஒரு நபி, முஹம்மத்

இப்றாஹிமுக்கு நீண்ட காலத்துக்குப் பிறகு, நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த தூதுவரை அனுப்புவதற்காக இறைவாக்குறுதி இம்முறை மூஸாவின் வார்த்தைகளில் மீண்டும் கூறப்பட்டது

டியுடெரோனமி 18:18ம் பகுதியில், இறைவனால் அனுப்பப்பட்ட நபியைப் பற்றி மூஸா பேசினார்: அந்த நபி

(1)இஸ்ரவேலரின் சகோதரர்கள் மத்தியில் இருந்து தோன்றுகிறார். அவர்களின் இஸ்லாமிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பற்றி ஒரு குறிப்பு உண்டு. வெளிப்படையாக ஒரு பெருந்தேச

மக்களாக ஆகுமாறு இப்றாஹிமின் அடுத்த புதல்வர் இஸ்மாயிலுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது.

(2) மூஸாவைப் போன்ற ஒரு நபி மூஸாவும், முஹம்மதுவும் போன்று ஒரே மாதிரியான இரு நபிமார்கள் இருக்கவில்லை. இருவரும் பூரணமான சட்ட வாழ்க்கை நெறிமுறைகள் வழங்கப்பட்டனர். இருவரும் தமது எதிரிகளை எதிர்த்துப் போராடினர். அற்புதமான முறைகளில் அவர்கள் வெற்றி எய்தினர். இருவரும் நபிகளாகவும், ஆட்சி நிபுணர்களாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இருவரும், அவர்களைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதிகளின் விளைவாக, நாடுதுறந்து சென்றனர். ஈஸாவுக்கும், மூஸாவுக்குமிடையேயுள்ள ஒப்புவமைகள் மேலே கூறப்பட்ட ஒற்றுமைகளை மாத்திரமன்றி ஏனைய தீர்மானிக்கும் அம்சங்களையும் கவனிக்காது விட்டுவிடுகின்றன. (உதாரணம், மூஸாவினதும் முஹம்மதுவினதும், இயற்கையான பிறப்பும், குடும்ப வாழ்க்கையும் மரணமும், ஆனால் ஈஸாவினது இல்லை. மூஸாவும் முஹம்மதுவும் இருந்தது போல், அவர் இறைவனது புதல்வராக இறைவனின் விஷேட தூதராக அல்ல, அவரது பின்தொடர்பவர்களால் மதிக்கப்படுகின்றார். முஸ்லிம்கள் சாவை நம்புவது போன்று, அவர் நம்பப்படவில்லை.

# எதிர்பார்க்கப்பட்ட நபி அராபியாவிலிருந்து வருகை தர இருந்தார்

33:1-2 பகுதியைக் கொண்ட டியுடெரோனோமி, மூஸா, ஈஸா, முஹம்மத் ஆகியோரைப் பற்றிய குறிப்புகளையுடையது. அது ஸினாயிலிருந்து பார்க்கக் கிடைத்த ஸெயிரிலிருந்து(அநேகமாக ஜெரூஸலத்துக்கு அண்மையிருக்கும் கிராமம்) தோன்றி, பரானிலிருந்து ஒளி வீசும் இறைவனைப் பற்றிப் பேசுகின்றது. 21:21,ஜெனிஸிஸ் பிரகாரம், பரான் பாலைவனத்தில் இஸ்மாயில் குடியேறினார். (அதாவது , அராபியா, குறிப்பாக மக்கா )

உண்மையில், மக்கா பள்ளத்தாக்கினூடாக (மக்காவின் மற்றுமொரு பெயர்)யாத்திரிகர்கள் கடந்து செல்வதாக ஜேம்ஸ் அரசனின் பைபிள் மொழி பெயர்ப்பு குறிப்பிடுகின்றது, (ஸாம் கீர்த்தனை: 84:4-6)

42:1-13 இஸாயா இறைவனின் அன்புக்குரியவர் பற்றிப் பேசுகின்றது. அவனது தெரிவு செய்யப்பட்டவரும், தூதருமானவர் தீவில் எதிர்பார்த்திருக்கும் சட்டத்தைக் கொண்டு வருவார். பூமியில் தீர்ப்பு ஏற்படுத்தும் வரை அவர்

தோல்வியடையவோ, அதைரியப்படுத்தப்படவோ மாட்டார். 11ம் வசனம் அந்த எதிர்பார்க்கப்படுபவரை கெதாரின் சந்ததியினருடன் தொடர்புறுத்துகின்றது. கெதார் என்றால் யார்? ஜெனிஸிஸ் 25:13ல் குறிப்பிட்டுள்ளதன்படி, கெதார் இஸ்மாயிலின் இரண்டாம் புதல்வர், நபி முஹம்மதுவின் மூதாதையாவார்.

## முஹம்மது, மக்காவிலிருந்து மதீனாவுக்கு நாடு துறந்து சென்றமை (ஹிஜ்ரத்) பைபிளில் முன் அறிவிப்புச் செய்யப்பட்டதா?

ஹபாக்குக் 3:3 தெஃமானிலிருந்து வரும் (இறை துணை) இறைவனைப் பற்றியும் (ஜே. ஹேஸ்டிங்க்ஸ் எழுதிய பைபிள் அகராதியின்படி, தெஃமான், மதீனாவுக்கு வடக்கில் அமைந்த பாலைவனப் பசுந்தரை), பரானிலிருந்து தோன்றும் புனிதமானவர் பற்றியும் பேசுகின்றது. துன்புறுத்தலுக்கு உடந்தையான அந்த புனிதமானவர் பரானி (மக்கா) லிருந்து நாடு துறந்து மதீனாவுக்கு செல்லவே, அங்கு ஆர்வத்துடன் வரவேற்கப்பட்டார். அவர் வேறு யாருமல்ல நபி முஹம்மதே யாவார்.

உண்மையில், நபியினதும், துன்புறுத்தப்பட்ட அவரது கூட்டத்தினரினதும் குடிபெயர்ந்த (ஹிஜ்ரத் செய்த) நிகழ்ச்சி இஸையா 21:13-17ம் வசனங்களில் விறுவிறுப்பாக வருணிக்கப்பட்டுள்ளது. அந்தப்பகுதி பத்ருப் போர் பற்றியும் முன்னறிவுப்புச் செய்தது. அப்போரில் மிகவும் குறைவாக ஆயுதம் தாங்கிய சிறு தொகையினரான விசுவாசிகள் அற்புதமான முறையில் கெதாரின் கூட்டத்தினரை தோற்கடித்தனர். அக்கூட்டத்தினர் இஸ்லாத்தை அழிக்கவும் இஸ்லாத்துக்கு மதம் மாறிய தமது சொந்த மக்களையே பயமுறுத்தவும் முற்பட்டனர்.

## பைபிளில் குர்ஆன் பற்றி முன்னறிவிப்பு செய்யப்பட்டதா?

இறைவனின் வார்த்தைகள் (குர்ஆன்) 23 வருடங்களாக, உண்மையில் முஹம்மதுவின் வாயினுள் புகுத்தப்பட்டன. அவர் குர்ஆனின் ஆசிரியர் அல்ல. அவருக்கு, ஜிப்ரீல் என்னும் மலக்கினால் குர்ஆன் எடுத்துக் கூறப்பட்டது. தான் கேட்கும் விதத்தில் அக்குர்ஆன் வார்த்தைகளைச் சாதாரணமாக மீளுரைக்குமாறு முஹம்மதை ஜிப்ரீல் வேண்டினார். இந்த வார்த்தைகள் பின்பு, முஹம்மதின் வாழ்க்கையின் போது அவரது கண்காணிப்பில், அவற்றைக்

கேட்டோர்களால் மனனம் செய்யப்பட்டன, பின்பு எழுதப்பட்டன.

இஸ்ராயில் கூட்டத்தினரைச் (அதாவது இஸ்மாயில் கூட்டத்தினர்) சோதார்களிடமிருந்து தோன்றிய மூஸாவைப் போன்று ஒரு நபி வருணிக்கப்பட்டார். அவரது வாயினுள் இறைவன் தனது வார்த்தைகளை நுழைப்பான். அவர் இறைவனின் பெயரில் பேசுவார்: இது யதேச்சையாக ஏற்பட்ட ஒத்த நிகழ்ச்சியா? (டியூடெரோனொமி 18:18 )

ஈஸா தனக்குப் பிறகு 'பரக்லீட்' என்பவர் வருவார் என முன்னறிவிப்புச் செய்தார். அவர் (பரக்லீட்) தன்னைப் பற்றிப் பேச மாட்டார். ஆனால் தான் கேட்பவற்றையே அவர் பேசுவார் என வருணிக்கப்பட்டார். இதுவும் ஒரு யதேச்சையான ஒத்த நிகழ்ச்சியா? (ஜோன் 16:13 )

இஸையா, கெதார் உடன் தொடர்பான தூதருக்கும் இறைவனுக்காக இசைக்கப்படும் தோத்திரப்பாடல் அடங்கிய (ஒருபுது மொழியில் வந்த ஒரு வேத நூலுக்கும்) ஒரு புது கீர்த்தனைக்கும் இடையில் இணைப்பு ஏற்படுத்துகின்றது. திக்கிப் பேசும் உதடுகளுடன், அவர் தனது நாவினால் தன் மக்களுக்கு பேசுவார். (இஸையா 28:11 )

பின்னையதாகக் கூறப்பட்ட வசனம் நபிகள் நாயகம் தனக்கு 'வஹி' இறங்கிய போது ஏற்பட்ட மன ஒருமைப்பாட்டையும், இறுக்கமான மனநிலையையும் பிரதிபலித்துக் காட்டும் அவரது திக்கிப் பேசும் உதடுகளை சரியாக வருணிக்கின்றது. இது மற்றுமொரு யதேச்சையான ஒத்த நிகழ்ச்சியா?

இதோடு சம்பந்தபபட்ட மற்றுமொரு அம்சம் யாதெனில், குர்ஆன் சிறிது சிறிதாக 23 வருட காலமாக அருளப்பட்டது. இஸையா 28:10ம் வசனத்துடன் இதனை ஒப்பிட்டுப்பார்ப்பது கவனத்தைக் கவரக்கூடியதாயிருக்கின்றது.

## அந்த நபி - பரக்லீட் - முஹம்மத்

டியூடெரொனொமி 18:18ம் வசனத்தில் தீர்க்கதரிசனம் கூறப்பட்டபடி, இஸ்ரவேலர்கள் ஈஸா (அவர்மீது சாந்தி உண்டாவதாக) வின் காலப் பகுதி வரை, மூஸாவைப் போன்ற அந்த நபியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஞானஸ்னானம் செய்விக்க குரு யோவான் வருகை தந்த போது, அவர்கள் அவரிடம், நீங்கள் தானா கிறிஸ்து நாதர், என்று கேட்டனர். அதற்கு அவர் இல்லை என்று பதில் கூறினார். அவர்கள் அவரிடம், நீங்கள் 'இல்யாஸ்' என்பவரா? என்று கேட்டனர். அதற்கு அவர், இல்லை, என்றார்.

பின்பு, டியூடெரொனெரமி 18:18ம் வசனத்தின் தெளிவான குறிப்பின்படி, அவர்கள் அவரிடம், நீங்கள் அந்த நபியா? எனக் கேட்டனர். அதற்கு, 'இல்லை' என்றார். (ஜோன் 1:19-21 )

பைபிளின் புதிய ஏற்பாட்டில், ஜோன் கூறுவதற்கு இணங்க, (14ம்,15ம்,16ம் அத்தியாயங்கள் ) ஈஸா தனக்குப் பிறகு வரும் பரக்லீட் அல்லது சமாதானம் செய்பவர் பற்றிப் பேசினார். அவர் பிதாவினால் மற்றுமொரு பரக்லீட்டாக அனுப்பப்படுவார். ஈஸாவின் சம காலத்தவர்கள் சகித்துக் கொள்ள முடியாத புது விடயங்களை அவர் போதிப்பார். பரக்லீட் சத்தியத்தின் ஆத்மாவாக வருணிக்கப்படுகின்றார். (அதன் பொருள் முஹம்மதின் பிரபல்யமான பட்டம், அல் அமீன் என்பதை நம்பிக்கைக்குரியவர் என்பதைத் ஒத்ருதிகறகி)து. அவர் ஒரு வசனத்தில் புனித ஆவியாக இனங்காணப்படுகின்றார். (ஜோன்14:26 ) அவ்வாறான பதவி, எவ்வாறாயினும் அந்த பரக்லீட் உடைய உருவக்குறிப்புடன் இணக்கமாகாது. பைபிள் அகராதியின் சொற்களில் கூறுமிடத்து (எட்.ஜே. மகன்ஸி ) இந்த அம்சங்கள், ஒரு பூரண, முரண்பாடில்லாத ஒரு மனக்காட்சியை அளிப்பதில்லை என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

உண்மையில், பல ஆரம்பகால கிறிஸ்தவர்கள் பரக்லீட் என்பவர் ஓர் ஆவியல்ல, ஒரு மனிதரே என்பதை புரிந்து கொண்டனர் என வரலாறு கூறுகின்றது. ஈஸா குறிப்பிட்ட அடிப்படைகளின் அளவுகோள்களைக் கவனியாது, எதிர்பார்க்கப்பட்ட பரக்லீட்டாக உரிமை கோரிய சிலரைப் பற்றி இது விளக்கஞ்செய்யக் கூடும்.

நபி முஹம்மதே (அவர் மீது சாந்தி உண்டாவதாக) ஈஸாவுக்குப் பிறகு இறைவனால் அனுப்பப்பட்ட பரக்லீடாவார், சமாதானம் செய்பவராவார், உதவி செய்பவராவார், எச்சரிக்கை செய்பவராவார். அவர் ஈஸாவை அத்தாட்சிப்படுத்தினார். ஈஸாவின் காலத்தில் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்த புது விடயங்களைப் போதித்தார். தான்செவியுற்றதைப் பேசினார். (இறை வெளிப்பாடு) (தனது நன்கு பாதுகாக்கப்பட்ட போதனைகளுடன்) அவர் தனது விசுவாசிகளுடன் வசிக்கின்றார். அவர் இறைவனின் இறுதித் தூதராய் இருந்தபடியால், அவ்வாறான போதனைகள் என்றும் நிலைத்து நிற்கும். அவரே, இறைவனின் ஆட்சியின் கீழ், பாதுகாக்கப்பட்ட சத்திய பாதையில் முழு மனித இணக்கத்தையும் ஒன்றிணைப்பதற்கு வந்த ஒரே ஒரு சர்வதேசிய தூதராகும். அவர் வரவிருக்கும்

பல விடயங்களைப்பற்றி கூறினார். அவை மிகவும் நுட்பமான முறையில் விரிவாக நடந்தேறின. உண்மையான நபிமார்களுக்கும், பொய் நபிமார்களுக்கும் இடையே பிரித்தறிவதற்கு மூஸாவினால் தரப்பட்ட அளவு கோள் கையாளப்பட்டது. ( டியுடெரொனொமி 18:22) பாவம், நேர்மை, தீர்ப்பு கொண்ட உலகை அவர் கண்டித்தார். (ஜோன் 16:8,11 )

## சமய தலைமைத்துவ மாற்றம் தீர்க்கதரிசனம் கூறப்பட்டதா?

இஸ்ரவேலரின் இறுதித் தூதர் ஈஸா நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இஸ்மாயிலை ஒரு பெரும் தேசிய இனமாக ஆக்குவதற்கு இறைவனால் அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படும் காலம் அதுவாக இருந்தது. (ஜெனிஸிஸ் 21:13,18 )

மதியூ 21:19 21ம் வசனத்தில், ஈஸா (யேசுநாதர்) பழமற்ற அத்தி மரத்தைப் பற்றிப் பேசினார். (நபித்துவ மரபுரிமை பற்றிய பைபிளின் சின்னம்) அம்மரம் பழம் தருவதற்கு மூன்று வருடங்கள் இறுதி வாய்ப்பாக கொடுக்கப்பட்டதன் பின் (யேசுவின் மூன்று வருடகால ஆட்சி) அந்த மரம் அகற்றப்பட வேண்டியுள்ளது. அதே

அத்தியாயத்தில் பின்னர் காணப்படும் ஒரு வசனத்தில் யேசுநாதர் கூறினார்: 'ஆகவே, நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன், இறைவனது இராச்சியம் உங்களிடமிருந்து அப்பால் எடுக்கப்பட வேண்டும். அது அதன் பழத்தை (பயனை) கொண்டுவரும் ஒரு தேசமக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.' (மதியூ 21:43) இஸ்மாயிலின் சந்ததியினரைக் கொண்ட தேசிய இனம் (மதியூ 21:42ல் நிராகரிக்கப்பட்ட கல்) ஏசுவினால் தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டதன்படி, அந்தக் காலப்பகுதியில் இருந்த வல்லரசுகளுக்கெதிராக வெற்றி கண்டது. 'யார் இந்த கல்லின் மீது வீழ்கின்றார்களோ அவர்களின் சக்தி முறியடிக்கப்படும். ஆனால் யார்மீது அக்கல் விழுகின்றதோ, அது அவரை தூசாக அரைத்து விடும்.' (மத்தியூ 21:44)

## சந்தர்ப்ப ஒத்த நிகழ்ச்சிக்கு வெளியே

இங்கு எடுத்தாளப்பட்ட பல தீர்க்க தரிசனங்கள் தனிப்பட்ட முறையிலும், சேர்ந்தும் சந்தர்ப்பத்துக்கு வெளியே அமையும் தவறான விளக்கங்களாக இருப்பது சாத்தியமானதா? அவ்வாறு அரிதாக ஆராயப்படும் வசனங்கள் முரணற்றதாகவும், தெளிவாகவும் பொருத்தமாகி வரலாற்றின் போக்கை மாற்றிய நபி முஹம்மத் (ﷺ) என்ற மனிதரின் வருகையை சுட்டிக்

காட்டுகின்றது என்பதில் எதிர் அணியினர் உண்மையானவர்களா? பைபிளின் வேறுபட்ட நூல்களில் தோன்றும், வெவ்வேறான காலங்களில் வெவ்வேறு நபிமார்களால் பேசப்பட்ட இந்த தீர்க்தரிசனங்கள் அனைத்தும் ஒத்த நிகழ்ச்சி என முடிவுரை கூறுவது நியாயமானதா? இது இவ்வாறாயின் இங்கே மற்றுமொரு ஒத்த நிகழ்ச்சி காணப்படுகின்றது.

பரான் (மக்கா) என்னும் இடத்திலிருந்து தோன்றும் நபியின் அடையாளங்களில் ஒன்று, அவர் பத்தாயிரம் மெய் ஞானிகளுடன் வருகை தருவார் என்பது. (டியுடெரோனொமி 33:2 கே.ஜே.வீ) கஃபாவில் எஞ்சியிருந்த சிலைவணக்கச் சின்னங்களை அழித்து விடுவதற்காக தனது பிறந்த பூமிக்கு, இரத்தந் சிந்தாது வெற்றியீட்டித் திரும்பிய போது, அந்த தொகையினரே முஹம்மத் நபியுடன் சேர்ந்து பரானுக்கு (மக்கா) வந்தனர். மூஸா கூறியபடி, இறைவன் சொல்லுகின்றான்:

எனது வார்த்தைகளை யார் செவியேற்காவிட்டாலும் அது நடந்தே தீரும். எனது வார்த்தைகளை அவர் எனது பெயரில் பேசுவார். அவரிடமிருந்து எனக்கு அது தேவைப்படுகின்றது. (டியூடோரொனொமி 18:19 )

**அன்புள்ள வாசகர்களே!**

சத்தியத்தின் ஒளி உங்கள் உள்ளத்திலும் இதயத்திலும் பிரகாசிக்கட்டும். அது உங்களை இந்த வாழ்க்கையிலும், மறுமையின் எல்லையில்லாத இன்பத்திலும் சாந்தி, உறுதி ஆகியவற்றின் பக்கம் வழிநடாத்திச் செல்லட்டும்.

ஆமீன்.